# தொண்டமனறில் அப்பாவிகளே பலியானதாக ராணுவ அதிகாரிகளிடம் சிவத்தம்பி முறையீடு!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 1-11-85 வெள்ளிக்கிழமை (ஐப்பசி 16 வைரி 17) முழக்கம் 267

## இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும்

தொண்டமானறுச் சம்பவத்தில் ராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானவர்கள் சம்பந்தமாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு உறுப்பினரான பேராசிரியர் கா. சிவத்தம்பி நேற்று யாழ்ப்பாண ராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசினர். செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு அருகாமையில் எவ்வாறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றதென்பதைத் தாம் நேரில் சென்று பார்வையிட்டதாகச் சுட்டிக்காட்டிய பேராசிரியர் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டமைக்கு போதிய சான்றுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துக் காட்டினர். இச்சம்பவத்தில் மரணமானவர் ஒருவரின் வீட்டுக்கும் பேராசிரியர் முதலில் விஜயம் செய்திருந்தார். இதுபற்றிபேராசிரியர் சிவத்தம்பியை 'ஈழமுரசு' தொடர்பு கொண்டபோது கருத்துத் தெரிவிக்கையில், இன்று நடைபெறும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் இவ் விடயம் பற்றித் தாம் எடுத்துரைக்கவுள்ளதாகவும், இராணுவத்தினரின் இவ்வாறான அத்துமீறல்கள் தடுக்கப்பட வேண்டுமென்பதே தமது முக்கிய கோரிக்கையாக இருக்குமென்றும் சொன்னர்.

★ ஜனாதிபதியின் பி. பி. ஸி. பேட்டிக்கு கூட்டணித் தலைவர் 'சிவா' பதில்

# முழுநாடும் எமக்கு வேண்டாம்; நாம் கேட்பது தமிழீழம்தான்!

## யுத்த நிறுத்தம் என்பது ஒரு போலிவேஷம்; ராணுவத் தீர்வையே அரசு விரும்புகிறது

(சென்னை)

"தமிழீழப் போராளிகள் மாக்ஸிஸவாதிகள் என்றும், ஆட்சியைக் கவிழ்த்து முழு நாட்டையும் கைப்பற்றுவதற்கே அவர்கள் முனைவதாகவும் ஜனாதிபதி ஜெயவர்த்தன பி. பி, ஸி. பேட்டியில் தெரிவித்தது சுதந்திரத்துக்காகவும், இன விடுதலைக்காகவும் போராடும் தமிழ் இளைஞர்களின் நோக்கத்தை இழிவு படுத்தும் ஒரு பிரசாரமாகும். நாம் முழு நாட்டையும் கேட்கவில்லை, தமிழீழத்தைப் பெறுவதே எமது போராட்டத்தின் நோக்கமாகும்" என்று கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தமது கற்பனையில் தோன்றியவற்றை லண்டனிலும், பஹாமாஸிலும் தெரிவித்து தமிழரின் போராட்டத்துக்கு களங்கம் ஏற்படுத்தி, அதன் மூலம் லாபம் பெறுவதே ஜனாதிபதியின் திட்டமெனவும் திரு. சிவசிதம்பரம் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்த நிறுத்தம் என்பது ஒரு போலிவேஷம் இக் காலத்தில் ராணுவத்தின் பலத்தை அதிகரித்து, இனப்படுகொலையை துரிதமாக மேற்கொள்வதே இதன் உள் நோக்கமாகுமென இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தீவிரவாதிகளை ஒரு வருடத்தில் முடிப்பேன்" என்று ஒரு நாட்டின் தலைவர் சொன்னல் அதற்கு அர்த்தமென்ன? அரசியல் அனுபவமுள்ள எங்

...6ம் பக்கம் பார்க்க

## வடபகுதி ரயில் சேவைகள் மீண்டும இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்புக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான ரயில்சேவை இன்று மீண்டும் ஆரம்பமாகின்றது.

தினமும் காலை 7.10க்கு மருதானையில் இருந்து புறப்படும் யாழ்தேவி பிற்பகல் 3.07க்குக் காங்கேசன்துறை போய்ச் சேரும்.

காங்கேசன்துறையிலிருந்து காலை 7.20க்குப் புறப்படும் உத்தரதேவி பிற்பகல் 3.43க்கு மருதானை வந்துசேரும்.

இன்ரசிற்றி ரயில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டும் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி காலை 5.45க்குப் புறப்படும். காங்கேசன்துறையிலிருந்து

...6ம் பக்கம் பார்க்க

## இரண்டு சம்பவங்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பிலுள்ள கல்லடியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீதுதீவிரவாதிகள்நேற்று முன்தினம் மாலை தாக்குதல்

...6ஆம் பக்கம் பார்க்க

## கோட்டை ராணுவ தாக்குதல்; சாட்சியமளிக்க பலர் தயார்

கடந்த மாதம் 24-ம் திகதி கோட்டைக்குள்ளிருந்து மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் லாஞ்சர் குண்டுத் தாக்குதல்கள் சம்பந்தமாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன் நேரடியாக சாட்சியமளிக்க பலர் முன்வந்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இத்தாக்குதலில் வீரசிங்கம் மண்டபம், தொலை தொடர்பு அலுவலகம் ஆகியவை பலத்த

-6ம் பக்கம் பார்க்க

## இளைஞர்கள் விடுதலை

நேற்று முன்தினமிரவு திடீரென யாழ்நகரில் ரோந்து

...6ம் பக்கம் பார்க்க

யாழ்நகர் நினைவு தினக்கூட்டத்தில் பேச்சு:

## தமிழ்ப் பிரதேசம் இரண்டல்ல; இதுவே இந்திராவின் கருத்து!

அன்னை இந்திரா காந்தி இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களை தனியான ஒரு பிரதேசமெனவே கருதினர், வடக்கு, கிழக்கு என்று அவர் பிரிக்கவில்லை. தமிழர் பிரதேசத்துக்கு சுய ஆட்சி வழங்கவேண்டுமென்று தான் அவர் சொன்னர். அவர் மறைந்து விட்டதால் தான் எமது ஆட்சியாளர்கள் வடக்கு கிழக்கு என்று பிரித்து இரண்டையும் இணைக்க முடியாது என்று இப்போது பேசி வருகிருர்கள் என்று யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில்இந்திரா காந்தி முதலாவது நினைவு தினக்கூட்டம் நேற்று மாலை அ. தி. மு. க. நகரச் செயலாளர் திரு. செ. சவுந்தரராஜன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் திரு.பால

...6ம் பக்கம் பார்க்க

## இந்திராவுக்கு இந்தியா முழுவதும் அஞ்சலி

(புதுடில்லி)

திருமதி இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட இடத்தில் நேற்றுக்காலை ஜனாதிபதி திரு. ஜெயில்சிங், துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன், பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்,

இரு நிமிட மௌனஞ்சலியும் இடம் பெற்றது. இசைக்குயில் எம். எஸ், சுப்புலக்ஷ்மியினல் பக்திகீதங்களும் இசைக்கப்பட்டன.

நேற்றைய நாள் தேசிய ஒருமைப்பாட்டுத் தினமாகவும் அனுசரிக்கப்பட்டது.

நேற்றுக்காலை திருமதி காந்தியின் சமாதியில் பிரார்த்தனைக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

பிரதமமந்திரி திரு. ராஜீவ் காந்தி, லோக்சபா சபாநாயகர் திரு. பல்ராம் ஜாக்கர், மத்திய மந்திரிகள், இந்திரா

...6ம் பக்கம் பார்க்க

## சீனி, அரிசி, மா, உர கப்பல்கள் ஒன்றன்பின்ஒன்ருகவருகின்றன

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆயிரம் தொன் சீனியுடன் 'மத்துரட்ட' என்ற கப்பல் காங்கேசன்துறைக்கு வருகிறது, இதனல் வடக்கே சீனிக்கு எதுவித தட்டுப்பாடும் ஏற்படாது என யாழ். உணவு கட்டுப்பாட்டதிகாரி திரு, சி. பற்குணம் தெரிவித்தார்.

அரிசி, மா, பாண் ஆகிய உணவுப் பொருட்களின் விலை அண்மையில் அதிகரிக்கப்பட்ட

...6ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் துக்கக் கொடி

மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் முதலாவது நினைவஞ்சலிக்காக நேற்று வடக்கின் பல இடங்

... 6ஆம் பக்கம் பார்க்க

## ஊழியரைத் தாக்கியவர் மன்னிப்புக் கோரினர்

யாழ். அபிவிருத்திச் சபை கொக்குவில் உப அலுவலக எல்லைப் பிரதேசத்தில் சட்ட விரோத மின் இணைப்பைத் துண்டித்த ஊழியரைத் தாக்கியவர் மேற்படி மின் ஊழியர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

செவ்வாய்க்கிழமை இவ் ஊழியர் தாக்கப்பட்டதையடுத்து வெளிக்கள ஊழியர்கள்

...6ம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

# ஆங்கில அறிவின்மையால் குறைந்த மாணவரே தேர்ச்சி

## வட்டாரக் கல்வி அதிகாரி தகவல்

இம்முறை யாழ். மாவட்டத்தில் மொத்தம் ஏழு பாடசாலைகளில் இருந்து ஆங்கில, தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகளுக்குத் தோற்றிய 175 மாணவர்களில் 35 மாணவர்களே தேர்ச்சிபெற்றுள்ளனர். ஆங்கிலத்தில் போதிய அறிவின்மையே முக்கிய காரணமாகும். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கான இப் பயிற்சி நெறிகளை அனைத்து மாணவர்களும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு வணிகத்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ் சிவராசா வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தாரால் நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆங்கில சுருக்கெழுத்து கேள்வி—பதில் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

எழுத்தாளர் திரு, நெல்லை க. பேரன் பேசுகையில், எமது நாட்டில் அரசாங்க நிர்வாகத்தில் தமிழ் மொழி அமுலாக்கத்தடைக்குப் போதியளவு தமிழ்த் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர்கள் இல்லை என்ற குறைபாடு அடிக்கடி பேசப்பட்டு வருகின்றது. எனவே எமது மாணவர்கள் ஆங்கிலத்தில் காட்டும் ஆர்வத்துடன் தமிழ் மொழியிலும் இக்கலையை விரும்பிக் கற்க வேண்டும் என்று கூறினர்.

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர்கள் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் ஆங்கில சுருக்கெழுத்தாளருமான திரு. எஸ். சிவச்சந்திரதேவன் இப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தார். இவருடன் நெல்லியடி அரசினர் ம. ம. வித்தியாலய ஆசிரியை செல்வி ரி. தேவராணியும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

நெல்லியடி அ. ம. ம. வித்தியாலயம், வதிரி தேவரயாளி இந்துக்கல்லூரிகளின் மாணவிகளும், வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச் சங்கத்தால் மாலி சந்தியில் நடாத்தப்படும் இலவச ஆங்கில சுருக்கெழுத்து வகுப்பு மாணவிகளும் இக் கேள்வி பதில் போட்டிகளில் கலந்து கொண்டனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவிகள் அதிகப்படியான ஒரு புள்ளியால் வெற்றியீட்டினர்.

தேவரயாளி இந்துக்கல்லூரி அதிபர் திரு. இரத்தினசபாபதி, வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் திரு. க. சின்னராஜா ஆகியோரும் மாணவரின் ஆர்வத்தைப் பாராட்டிப் பேசினர். வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# திருடர் கோஷ்டி அகப்பட்டது

(செம்பியன்பற்று)

உடப்பிலிருந்து வந்து சுண்டிக்குளம் பகுதியில் தொழில் செய்து வந்த ஒருவரின் வாடியிலிருந்து சுமார் 75,000 ரூபா பெறுமதியான வலை, என்ஜின் உட்பட பல உபகரணங்கள்கொள்ளையிடப்பட்டது இளைஞர் குழுவினர் நடத்திய தீவிர வேட்டையை அடுத்து மூவர் கொண்ட திருடர் கோஷ்டி இளைஞர்களிடம் அகப்பட்டுக் கொண்டது.

அகப்பட்ட திருடர் கோஷ்டியினரின் வீட்டிலிருந்து வலைகள், என்ஜின் உதிரிப்பாகங்கள் உட்பட சுமார் ரூபா 30,000 திற்கும் மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன மிகுதிப் பொருட்களையும் மீட்பதற்காக அவர்கள் தொடர்ந்தும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

இவர்கள் களவாடப்பட்ட பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்றனர் என்றும், இவர்களை விசாரிக்கப்பட்டதை அடுத்து முன்பு நடைபெற்ற சில கொள்ளைகள் பற்றிய தகவல்களும் கிடைக்கப் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# செய்கைமுறைப் பரீட்சை இன்று கொழும்பில்

(நல்லூர்)

1985 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர பத்திர (உயர்தர) பரீட்சையில் மனைப்பொருளியல் பாடத்தில் சித்திபெற்றவர்களுக்கான செய்கைமுறைப் பரீட்சை தெகிவளை பல்தொழில் நுட்பக் கல்லூரியில் இன்று தொடக்கம் இரண்டுவாரங்கள் நடைபெறவிருக்கிறது.

இந்த மனைப் பொருளியல் செய்கை முறைப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெருந்தொகையான பெண்பிள்ளைகள் கொழும்புக்குச் செல்லவிருக்கிறார்கள். புகையிரத சேவையை இடைநிறுத்தம் செய்திருப்பதால் தமது பிள்ளைகளை எப்படி கொழும்புக்கு அழைத்துச் செல்வது என்று பெற்றோர் பெருங்கவலையடைந்துள்ளனர்.

குறிக்கப்பட்ட திகதியில் பரீட்சைக்குத் தோற்றத் தவறிய பரீட்சார்த்திகளுக்கு வேறொரு தினம் வழங்கப்படமாட்டாது என்று பரீட்சார்த்திகளுக்கு வந்துள்ள கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மின் மாற்றி திருத்தபபட்டது

(உடுவில்)

சுன்னுகம் உப அலுவலகத்திற்குட்பட்ட கந்தரோடையிலுள்ள மின் மாற்றி மீண்டும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. களவாக மின்சாரம் பெறுபவர்களின் தொல்லையால் அதிக மின் வலுவைத் தாங்கிக் கொள்ள முடியாத 'மீற்றர், கட் அவுட்,' சுவிச் போட் யாவும் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் எரிந்து சாம்பலாகின இதனுல் அப்பகுதி இரண்டு கிழமைகளுக்கும் மேலாக இருளில் மூழ்கியது.

தற்பொழுது அப்பகுதி பொது ஸ்தாபனங்கள், தனிநபர்கள், இளைஞர்கள் ஆகியோரின் விடாமுயற்சியினுல் வேறு இடங்களிலிருந்து உபகரணங்கள் கொண்டு வரப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. மீண்டும் இது போன்றதொரு நிலை ஏற்படுமேயானுல் அப்பகுதிகள் யாவும் தொடர்ச்சியான இருளை அனுபவிக்க வேண்டியேற்படுமென பேசிக் கொள்ளப்படுகிறது:



சில்லாலை சௌந்தரம் - ரேஸ் தம்பதியின் மகன் அன்ரன் மார்ஸல் டிற்ரே இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

மண்டைதீவு இருதயநாதர் - இரசாமலர் தம்பதியின் மகன் பெற்றூஸ் தயாபரன இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

கரணவாய்தெற்கு கார்த்திகேசர் - விமலாதேவி தம்பதியின் மகள் கார்த்திகா இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

கொக்குவில் பாலசுப்பிரமணிய ஐயர் - பத்மாதேவி தம்பதியின் மகன் பிரணவன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.


வரணி மகாதேவன் - கமலாதேவி தம்பதியின் மகன் பார்த்திபன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

யாழ். - கண்டிவீதி கனகலிங்கம்-கிருஷ்ணமணி தம்பதியின் மகள் பத்மலோஜினி இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

கோண்டாவில் வடக்கு தர்மகுலசிங்கம் - றஞ்சினி தம்பதியன் மகள் கார்த்திகா இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

# சாரணரின் சாதனைகள்

கடந்த 26ம் 27ம்திகதிகளில் யாழ். பழைய பூங்காவில் நடைபெற்ற வருடாந்த சாரணர்பாசறையில்பரி.யோவான் கல்லூரி சாரணர்கள் சமூக சேவை, தேசிய சாரணர் வாரம் ,சிறு வேலை வாரம், சிறந்த தகைமைகள் ஆகியவற்றில் முதலாம் இடத்தையும் திறமை, அணிநடைஎன்பவற்றில் இரண்டாம் இடத்தையும் குழுபபதிவேடுகள், பாசறைத் த் நிகழ்ச்சி ஆகியவற்றில் மூன்றும இடத்தையும பெற்று துருப்பின் சார்பில் நான்கு கேடயங்களையும் ஒரு வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டனர். இப்போட்டிகளுக்கான சகல பயிறசிகளையும் உதவி சாரணத் தலைவர் பெ. சந்திரசகேயர் மற்றும் அணித் தலைவர்களும் உதவி அணித் தலைவர்களும் சாரணச் சிறூர்களுக்கு அளித்து இருந்தனர். பாசறையின் பண்டகசாலை பொறுப்பாளர்களாக ஜே. டி. ஜோன, கே. அசோகன் ஆகியோர் கடமையாற்றினுர்கள்.



இலங்கை ,இளங் கலைஞர் மன்றத்தின் கலைமகள் விழாவில் இன்னிசைத் தென்றல், சங்கீத பூஷணம் பொன். சுபாஷ் சந்திரன் இசை நிகழ்ச்சி வழங்குகையில் எடுக்கப்பட்ட படம். அணி செய் இசையினராக செல்வி பாக்கியலட்சுமி நடராஜா வயலினும், எஸ், மமேந்திரன் மிருதங்கமும், எஸ். இராசா முகர்சிங்கும், எஸ் துரைராஜா கடமும், செல்வி. பரமேஸ்வரி கோவிந்தராஜன் தம்பூராவும் வாசித்தனர். [படம்: ஆனந்]


## புனித விடுதலை இயக்கங்களுக்கு ஓர் வேண்டுகோள்

(AERO ELECTRICAL INDUSTRIES)

எமது தொழிற்சாலையாகிய ஏரோ எலக்ரிக்கல்ஸ் இண்டஸ்றீஸ் ஸ்தாபனத்தினுள் இனந்தெரியாதோர் சிலர் 29-10-85 இரவு பத்தரை மணியளவில் புகுந்து காவலாளரை மிரட்டிய பின் பல ஆயிரம் ரூபா பெறுமதியான வேலைத்தல உபகரணங்கள் உற்பத்திப் பொருட்கள், மின்மானிகள் உட்பட பலபொருட்களையும், பணத்தினையும் எடுத்துச் சென்றுள்ளதுடன் மீண்டும் வருவதாக கூறிச் சென்றுள்ளனர். வேலைத்தல உபகரணங்களும் மின்மானிகளும் எடுத்துச் செல்லப்பட்டதால் தொழிற்சாலை இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. சுமார் அறுபது ஏழைத் தொழிலாளர்கள் இதனுல் வேலை இழக்க வேண்டியுள்ளனர். தொழிற்சாலை மூடப்பட்டு நாம அனைவரும் வேலையை இழக்கும் நிலையிலிருந்து எம்மை மீட்க உதவும்படியும், களவாடப்பட்ட பொருட்களை மீட்டுத் தருமாறும் இனிமேல் இத்தகைய களவுகள் நடைபெருது தடுத்துதவுமாறும் புனித விடுதலை இயக்கங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிரும்.

ஏரோ எலக்ரிக்கல்ஸ் இண்டஸ்றீஸ் ஸ்தாபனத்தின் பணியாளர்கள்.

சுன்னுகம்
30.10.85



## மலிவு விற்பனை (Clearance Sale)

இல்லத்தரசிகளே உங்கள் நேரத்தையும், சக்தியையும் மீதப்படுத்தி நொடிப் பொழுதில் சமையல் செய்யத் தேவையான மின்சார அடுப்புகள் (Belling Cookers), பாமிக்ஸ், மின் சலவை இயந்திரம், மின் அழுத்திகள் (Mini Irons), மேசை மணிக்கூடுகள், Toasters; Non-Stick Pans, Hair Dryers, Pocket Radios, T. V. Stands· Air Conditioner, Vacuum Cleaners, Sony and National Sterio Sets ஆகியவற்றை மலிவான விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:-

**CROSS TECHNICAL SERVICES**

குறிப்பு :- பிரான்ஸ் (France), கனடா (Canada), அமெரிக்கா (America)) செல்ல விரும்புவோருக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்.
பெல்ஜியம், இத்தாலி, மெக்ஸிக்கோ விசாவுடன் ஒரு வழி விமான டிக்கெட்டுகளும் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

**CROSS TRAVEL SERVICES (PTE) LTD.**

உள்நாட்டுத் தொலைத்தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள;-

'CROSS INTERNATIONAL TELECOMMUNICATION SERVICES.

No: 5, 1st Floor, Model Market, Jaffna.
Telephone- 22040, 22816, 22817

# மாதர் சிசு பராமரிப்பிற்கு நிரந்தர கட்டடம் அமையும்

## பிரஜைகள் குழுத்தலைவர் தகவல்

(கல்வியங்காடு)

"கட்டப்பிராய் மாதர் சிசு பராமரிப்பு நிலையம் முப்பது ஆண்டுகளாக நிரந்தரக் கட்டடம் இன்றி கலைமணி சன சமூக நிலைய மண்டபத்தில் இயங்கி வருகிறது. எட்டுக் கிராமங்களிலிருந்து முந்நூறுக்கும் மேலான கர்ப்பிணிகள் தாய்மார் குழந்தைகள் இந்த நிலையத்தில் சிகிச்சை பெறுகின்றனர். வெயிலிலும் மழையிலும் நனைந்தவாறு கஷ்டமான சூழ்நிலையில் இவர்கள் சிகிச்சை பெறுவது பரிதாபத்துக்குரியது. இருபாலை குளக்கண்டியில் உள்ள காணியொன்றை மாதர் சிசு பரிபாலன நிலையம் அமைப்பதற்குத் தந்துதவியமையும் கட்டடம் கட்டுவதற்கு ரூபா இருபதினாயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும் இந்த வேளையில் மகிழ்ச்சி தருவதாகும். இதற்கான அடிக்கல் நாட்டுவிழா விரைவில் நடைபெறவுள்ளது"

இவ்வாறு கோப்பாய் தெற்கு இருபாலைப் பிரஜைகள் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஆசிரியர் திரு. அ. செல்லத்துரை உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் போக்குவரத்து சேவைகள் இலகுவாக இல்லாத இந்நேரத்தில் இம்மாதிரியான மாதர் சிசு பராமரிப்பு நிலையங்கள் பலருக்குப் பேருதவியாக அமையும் எனவும் இவற்றை நல்ல முறையில் பரிபாலித்து வருதல் அவசியமாகும் எனவும் தெரிவித்தார்.

பிரஜைகள் குழுத் தலைவராகக் கடமையாற்றிய சட்டத்தரணி திரு க. வைரவநாதன் காலமாகியதால் அவரது இடத்துக்கு திரு. க. கனகலிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். நிர்வாக சபை உறுப்பினர்கள் இல்லாத பகுதிக்கு இரண்டு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

திரு. க. நித்தியானந்தன் திரு. கு. தங்கவடிவேல் திரு. ரி. ஆர். செல்வரத்தினம் திரு, எஸ். இட்சுமிகாந்தன் ஆகியோரும் உரையாற்றினர். உணவுப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு மகளிர் பேரவை அகதி முகாமுக்குக் கொடுப்பதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# தமிழர் நெருக்கடி நிலை தீர தெய்வ வழிபாடு அவசியம்

(இருபாலை)

வரலாற்றுப் பெருமையுடன் வாழ்ந்து வந்துள்ள தமிழினம் இன்று வாழ இடமின்றி, பல்வேறு விதமான கஷ்ட நஷ்டங்களையும் உயிரிழப்புகளையும் அனுபவித்து அகதிகளாக்கப்பட்டு 'திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை' என்னும் நிலைமைக்கு ஆளாகியிருக்கும் இந்நேரம், இவ்விதமான கூட்டுப்பிரார்த்தனைகளும், தெய்வவழிபாடுகளும் மிக அவசியமாகும்.

இவ்வாறு கோப்பாய் தெற்கு அத்தித் தோட்ட பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்றைய நாட்டு மக்களின் நலன்களுக்காக நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனையிலும் விசேட வழிபாட்டிலும் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஆலயத் திருப்பணிச் சபையின் முன்னாள் செயலாளரும், சமாதான நீதவானுமாகிய "சமூக இரத்தினம்" திரு. எம். கே. இளையப்பு குறிப்டார்.

உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. பொன். பேரின்பநாதன் தலைமையில் கூட்டுப் பிரார்த்தனையும், வழிபாடும் இடம் பெற்றது.

கோப்பாய் சூரியோதய சன சமூக நிலையத் தலைவர் திரு. கே. செல்லையா பேசுகையில், இவ்வித கூட்டுப்பிரார்த்தனைகளும், விசேட வழிபாடுகளும், மக்களின் இன்னல்களை நீக்குவதற்கு உதவுவதுடன் ஒவ்வொருவரின் ஆன்ம ஈடேற்றத்திற்கும் உறுதுணையாகும் என்றும் குறிப்பிட்டார்.

ஆலயத்திருப்பணிச் சபைத் தலைவர் திரு. கே. செல்வவிநாயகம் ஆசிரியர் திரு. பொன். பேரின்பநாதன், சோதிடர் திரு. ஆர். தருமலிங்கம் ஆகியோருட்பட வேறுபலரும் உரையாற்றியபின் திருப்பணிச் சபையின் செயலாளர் திரு. இ. கோபாலசிங்கம் தமது நன்றியுரையில் மிக விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கும் இவ்வாலயத்தின் புனரமைப்புக்காக இதுவரை பணஉதவி பொருளுதவி ஆகிய பல உதவிகளையும் வழங்கிய அன்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

# விஞ்ஞான கூடமும் நூலகமும் அமைக்கப்படுமென அறிவிப்பு

(பரந்தன்)

"முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயத்திற்கு விஞ்ஞான கூடம் ஒன்றும் நூல் நிலையமும் அடுத்த வருட முற்பகுதியில் அமைத்துக் கொடுக்கப்படும். இதன் மூலம் இங்கு கல்வி பயின்று வரும் உயர்தர வகுப்பு மாணவர்கள் சிறந்த பயனை அடைய முடியும்.

தற்போதைய இக்கட்டான சூழ் நிலையில் மாணவர்கள் கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கவே விருப்பம் கொண்டுள்ளனர். எனவே எனது சேவைக்காலத்தில் கிராமப் புறப்பாடசாலைகளின் அபிவிருத்தியிலேயே கூடிய கவனம் செலுத்தவுள்ளேன்.

முரசு மோட்டை முருகானந்தா மகா வித்தியாலயத்தில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா சென்ற 23 ம் திகதி வித்தியாலய அதிபர் சி. துரைராசா தலைமையில் இடம் பெற்றது,

இக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ் வைபவத்தில் பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி என். தணிகாசலமும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்,

## சனீஸ்வர ஓமம் நடைபெறும்

சனீஸ்வரர் 3ம் திகதி விருச்சிக இராசியில் பிரவேசிப்பதை அடுத்து திருநெல்வேலி வடக்கு அரசடி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் தேவஸ்தானத்தில் அன்று காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை சனிஸ்வர ஓமம் நடைபெறவுள்ளது

# அனைவராலும் நேசிக்கப்பட்ட அதிபர் ஆனந்தராஜனின் பிரிவு பேரிழப்பாகும்

## ஞான ஒடுக்கத்தில் ஹாட்லி அதிபர் பேச்சு

(நல்லூர்)

"கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து உழைத்து வளர்த்த பெருமக்களில் திரு. ஆனந்தராஜனும் ஒருவராவர். கல்லூரிக்கிடையே ஒருமைப்பாட்டையும், ஐக்கியத்தையும் கட்டி வளர்த்தார். தனியார் கல்லூரிகளாக இயங்கிய சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, சென். யோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுடன் அரசாங்க பாடசாலையாக இயங்கிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியையும் ஒன்றிணைத்து ஒன்றித்த செயல்பாடுகளை விருத்தி செய்தார். எல்லோராலும் நேசிக்கப்பட்ட இவரின் பிரிவு கல்வியுலகிற்கு பேரிழப்பாகும்."

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. டபிள்யூ. என். சாமுவேல் சுன்னாகம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் இலங்கைக் கிறிஸ் ஆசிரிய சங்க ஒன்றியத்தின் வட பிரதேசக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஞான ஒடுக்கத்தில் காலஞ் சென்ற திரு. சி. ஈ. ஆனந்தராஜன் சங்கத்தின் உபதலைவராகவும், கல்லூரி அதிபராகவும் இருந்து ஆற்றிய சேவைகளுக்கு நன்றி தெரிவிக்கு முகமாக ஆச்சிரம ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்ட நன்றி தெரிவிக்கும் திருவிருந்தாராதனையில் இரங்கலுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஆச்சிரம பிரதம சேவக அருட்திரு. சாம் அல்பிரட் அடிகளாரும், யாழ்ப்பாண ஆர்ச் டீக்கன் அருட் திரு. சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளாரும் இணைந்து ஆராதனையை ஒப்புக் கொடுத்தனர். பெரும் தொகையான ஆசிரியர், ஆசிரியைகள் கலந்து கொண்ட இந்த ஆராதனையில்திரு. சாமுவேல் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது.

அதிபர் பதவியில்தனக்கு என ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட இவர் கிறிஸ்தவ ஆசிரியர் சங்கத்தின் வடபிரதேசக் கிளையில் பல பதவிகளையும் வகித்து கிறிஸ்தவ ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்காக அருந் தொண்டாற்றினார்.

எல்லோராலும் நேசிக்கப்பட்ட அதிபராகவும், சிறந்த கல்விமானாகவும், சிறந்த தந்தையாகவும் விளங்கினார். விலங்கியல் துறையில் சிறந்த ஆசிரியராகவும் விளங்கிய இவர் கல்லூரி மாணவர்களுக்கு நல்ல மேய்ப்பனாகவும், காரியங்களை ஒழுங்கு படுத்தி நடாத்தும் சிறந்த ஒழுங்கு பண்ணுபவராகவும் திகழ்ந்தார். நிர்வாகத்துறையில் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கி புகழ் பெற்றவராவர்.

பிறருக்கு உதவும் தன்மையுள்ள இவர், அரச இராணுவத்தால் பயங்கரவாதிகள் என்ற முறையில் கைது செய்யப்பட்ட அநேக பாடசாலை மாணவர்களையும், வாலிபர்களையும் இராணுவ அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு ..ண்மையை விளக்கி அவர்.. விடுதலை செய்வித்த சிறந்த தேசிய வாதியாக விளங்கினார்.

அரச இராணுவத்தால் ஹாட்லி கல்லூரியின் வகுப்பறைகளும், நூல் நிலையமும் எரிக்கப்பட்ட பொழுது ஹாட்லிக் கல்லூரிக்கு நேரில் வந்து கொமாண்டோ படைகள் ஆயுத பாணிகளாக கல்லூரியைச் சுற்றி நிற்க, தனது உயிரை துச்சமென மதித்து பயமுறுத்தலுக்கு மத்தியிலும் கல்லூரியைச் சுற்றிப்பார்த்து எமக்கு ஆறுதல் கூறினார்.

அத்துடன் கல்லூரியின் விடயமாக ..ாழும்புக்குச் சென்ற ..முவில் தானும் இடம் ..பெற்று பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்துமுதலி உட்பட அரசாங்க அதிகாரிகளை நேரில் கண்டு பேசி நடந்தவற்றை ஆணித்தரமாக உறுதியோடு எடுத்துக் கூறி விளங்க வைத்தார். இப்படியான செயல் திறமை மிக்க செயல்வீரனை நாம் திடீரென இழந்தது இந்த நாட்டுக்கும், கல்வியுலகிற்கும் பேரிழப்பாகும் என்று குறிப்பிட்டார்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பரராஜசிங்கம் பேசுகையில், காந்தம் போல மற்றவர்களைக் கவரும் ..க்தியுள்ள இவர் குழந்தை உள்ளம் கொண்டவராக, பிறருக்கு எந்த நேரமும் உதவும் எண்ணத்தையுடைவராகவும், வாழ்ந்தார். கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களை தமது பெற்ற பிள்ளைகள் போலக் கவனித்த இவர் அவர்களின் வளர்ச்சிக்கு ஆலோசனை கூறும் பேறு பெற்றவராக விளங்கினார் இவரது பிரிவு ஆசிரியருலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்று குறிப்பிட்டார்.

வேத வாசிப்பை திரு. எம். என். சுகிர்தரத்தினம் ஆசிரியரும், திருமதி கந்தசாமி ஆசிரியையும் வாசித்தார்கள். வேத பாட தியானத்தை திரு. ஜோதி கூல் நடத்த, மதிய வேளை ஜெபதியானத்தை ஆசிரியர் எஸ். ஜெபநேசன் நடாத்தினார்.

இந்த ஆராதனையில் திரு. ஆனந்தராஜனின் பாரியார் திருமதி பத்மா ஆனந்தராஜனும், மூத்த மகன் செல்வன் தேவானந்தன் ஆனந்தராஜனும், அவர்களது நெருங்கிய உறவினர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்குச் சங்கச் செயலாளர் திரு. டி. பொன்னையா நன்றி கூறினார்.

# போட்டி இருக்க வேண்டும் ஆனால் பொறாமை கூடாது

## மாதர் சங்க விழாவில் பேச்சு

(புங்குடுதீவு)

"தமிழ்மக்கள் தமது மூல வளத்தையும் மூளைவளத்தையும் நல்ல முறையில் பயன் படுத்துவதற்கு வழிசெய்யும் வகையில் இளஞ்சிறுர்களை வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு மாதர்களைச் சார்ந்ததாகும். தமிழர்களின் பிரதான மூலவளமான பனையின் பிரயோசனங்களைம் பயன் படுத்தி, கிராமங்களில் படித்து விட்டு வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பை வழங்க மாதர் சங்கங்கள் வழி செய்ய வேண்டும்."

ஊரைதீவு மாதர் சங்கம் ஆரம்பித்துள்ள தையற்பயிற்சி நிலையத்தை திறந்துவைத்து உரையாற்றிய தமிழர் கலாசாரச் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மாதர் சங்கத் தலைவி திருமதி. சந்திரா கோபால் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திரு. எஸ். கே. மகேந்திரன் மேலும் பேசியதாவது:

பொதுவேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது போட்டி இருக்கவேண்டுமே தவிர பொறாமை இருக்கக் கூடாது. பொறாமை ஏற்பட்டால் பதவிப்போட்டிகள் உருவாகி ஈற்றில் பொது இயக்கங்களே அழிந்துவிடும். எனவே தலைமை தாங்கிச் செல்பவர்களின் மீது பொறாமை கொள்ளாது அவர்களின் வழி காட்டலின் கீழ் இயங்கி கட்டுப்பாட்டோடு செயற்பட்டு, கருமங்களை வெற்றியோடு முடிக்கும் மனப்பாங்கை ஒவ்வொருவரும் பெறவேண்டும். தமிழர் தம் கலாசார பாரம்பரியத்தை இழக்காது, வாழக்கூடியவகையில் தமிழர்களின் எதிர்காலத் திட்டங்கள் அமையவேண்டும்.

இவ்விழாவில் திருவாளர்கள் ந. தனபாலசிங்கம், கு. யோகலிங்கம் ஆசிரியர், தி. ஸ்ரீதரன், கே. ஜி. ராஜா, செ. நித்தியானந்தன், அ. நிமலன் மு. நித்திய குலசிங்கம், திருமதிகள் பு. பாஸ்கரன், சி. பாலசுப்பிரமணியம், செல்விகள் அ. நடராசசர்மா, சா. திருநாவுக்கரசு, ஆகியோருட்படப் பலர் உரையாற்றினர். ஈற்றில் மாதர் சங்கச் செயலாளர் செல்வி இ. துரையப்பா நன்றியுரை நிகழ்த்தினார். நிலையப் பொறுப்பாசிரியையாகசெல்வி ஜே. அம்பலவாணர் நியமனம் பெற்றுள்ளார்.

## சிரமதானம்

(கொடிகாமம்)

உசன் இராமநாதன் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களினால் அண்மையில் மிருசுவில் புனித நிக்கிலார் சேமக்காலை சிரமதானமுறையில் துப்பரவு செய்யப்பட்டது.

## இன்று கண்காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தின் மாணவியர்களால் உருவாக்கப்பட்ட சித்திர, கைப்பணி, பொருட்களாலான, சித்திரகைப்பணிக் கண்காட்சி ஒன்று இன்று காலை ஆரம்பமாகிறது. 9 மணிக்கு ஆரம்பமாகும் இக் கண்காட்சி பிற்பகல் 4 மணிவரை நடைபெறும்.

இளீன்கட்

★ தரமான போட்டோஸ்டட் பிரதிகள்

★ தட்டச்சு எழுத்து வேலைகள்

★ றேனியோ அச்சு வேலைகள்

★ பெண்கள் குழந்தைகளுக்கான ஆடைகள், தையல் வேலைகள்

239, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22823

**உதய சிந்தனை**

*சிந்தனைகளைவிட செயல்களே ஒரு மனிதனின் குணதிசயங்களை முழுமையாக வெளிப்படுத்துகின்றன.*

—யாரோ

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

1-11-85 வெள்ளிக்கிழமை (குரோதன - ஐப்பசி 16)

# ஜனாதிபதியின் பேட்டிக்கு இதுவே சரியான பதில்

இலங்கையில் சர்வாதிகார ஆட்சியொன்று அமைக்கப்படும் என்ற ஆருடம் இன்று, நேற்று சொல்லப்பட்டு வரும் ஒரு விடயமல்ல.

1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போதே எதிர்க்கட்சிகள் தமது பிரசாரத்தில் இதனை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வந்தன.

அன்றைய பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெல்லுமானால், இந்நாட்டில் புதிய ஹிட்லரும், முசோலினியும் தோன்றுவார்கள்; சர்வாதிகார, பாஸிஸ ஆட்சியொன்று உருவாக்கப்படும் என்று சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள்.

சொன்னவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரானவர்களாதலால், ஸ்ரீமான் பொதுஜனம் அதனைப் பெரிது படுத்தவில்லை.

இந்த அரசாங்கத்தினால் புதிதாக உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் தமிழருக்கு மட்டும் எதிரானதல்ல; தொழிலாளி, பாட்டாளி மக்களின் நலனுக்கே குந்தகம் விளைவிக்கும் என்று எதிர்ப்புக் குரல் கொடுக்கப்பட்டபோது பெரும்பான்மை மக்கள் வாளாவிருந்தனர்.

தமிழர் பகுதிகளிலிருந்து கிளப்பப்பட்ட எதிர்ப்புக் கோஷங்களுக்கெல்லாம் அரசாங்கம் இன விரோத சாயத்தைப் பூசி மழுங்கடிக்கச் செய்து வந்தது.

சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதி அமைப்பு முறை சர்வாதிகார ஆட்சி உருவாக்கலின் முதற்படி என எதிர்க்கட்சிகள் குரலெழுப்பிய போதெல்லாம், அவர்களுக்கு கம்யூனிஸ்டுகள், மாக்ஸிஸ்டுகள், அந்நிய நாடுகளின் அடிவருடிகள் என்று அரசாங்கம் பட்டம் சூட்டி, அவர்களது குற்றச்சாட்டுகளைத் தட்டிக் கழித்து வந்தது.

அரசியலமைப்புக்கு அவ்வப்போது கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டங்களெல்லாம் பெரும்பான்மைப் பலத்தினால் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டன.

காற்றுச் சாதகமாக இருந்ததால், பட்டம் விண்நோக்கிச் செல்வதுபோல, சர்வாதிகாரப் படிகள் முன்னேக்கிச் சென்றன.

பயங்கரவாத தடைச் சட்டம், அப்பாவித் தமிழர்களையும் அழித்தொழிக்கும் சர்வ வல்லமை வாய்ந்தது என்பதை தமிழினம் இன்று நேரடியாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

இவை போதாதென்று, மேலும் பல புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதும், பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களைப் படையணிக்குச் சேர்ப்பதும், புதிய துணைப்படைகளை உருவாக்குவதும், அன்று எதிர்க்கட்சிகள் முன்வைத்த எச்சரிக்கையை ஊர்ஜிதம் செய்பவையாக அமைந்து வருவதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டியது எமது கடமையாகும்.

"இலங்கையில் சர்வாதிகார ராணுவ ஆட்சியை அமைக்க அரசாங்கம் முயற்சி செய்து வருவதாக" முக்கியமான மூன்று அரசியல் கட்சிகளின் கூட்டணி விடுத்திருக்கும் எச்சரிக்கை இவ்வேளையில் மிகவும் நிதானமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

லங்கா சமசமாஜக் கட்சி, மாஸ்கோ சார்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை மக்கள் கட்சி ஆகிய மூன்றுமே இந்த எச்சரிக்கை அறிவிப்பை விடுத்துள்ளன.

இந்தக்கட்சிகள் தமிழ் பிரதேசங்களில் தலைமைப் பீடத்தைக் கொண்டவையல்ல; தமிழர்களைத் தலைவர்களாகக் கொண்டவையல்ல.

பெரும்பான்மையாக சிங்கள மக்களையே இந்தக்கட்சிகள் தமது அங்கத்தவர்களாகக் கொண்டவை.

எனவே இக்கட்சிகளின் எச்சரிக்கையை அரசாங்கம் இனவாத வர்ணம் பூசி, தட்டிக்கழித்து விடுவது இலகுவானதல்ல.

கடந்த வாரம் பி. பி. ஸிக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அளித்த பேட்டியில் தமிழ் மாக்ஸிஸ்டுகள் ஆட்சியைக் கவிழ்த்து முழுநாட்டையும் ஆள்வதற்கு முயற்சிப்பதாக தெரிவித்திருந்தார்.

ஆனால் இங்கு மூன்று பிரதான எதிர்க்கட்சிகள் இலங்கையில் சர்வாதிகார ராணுவ ஆட்சியை அமைக்க அரசாங்கம் முனைவதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே இதனை ஜனாதிபதியின் பி. பி. ஸி. பேட்டிக்கு அளிக்கப்பட்ட சரியான ஒரு பதிலாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

---

★ பி. பி. ஸி. பேட்டியில் ஜனாதிபதி ஜே. ஆர்.

# தீவிரவாதிகளை கட்டுப்படுத்த என்னால் முடியும்! ஆனால்...

**காமன்வெல்த் மாநாட்டுக்குச் சென்றிருந்த சமயம் பி. பி. ஸிக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன ஒரு பேட்டியளித்திருந்தார். கேள்வி, பதில் வடிவத்திலேயே முழுப்பேட்டியையும் இங்கு தருகின்றோம்.**

வினா: உள்ளூர் சுயாட்சி எனும் வகையில் நீங்கள் தமிழ் தலைவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளவற்றை அவர்கள் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை?

விடை: ஏனென்றால் தமிழ் தலைவர்கள் பயங்கரவாதிகளுக்கு மிகப் பயப்படுகின்றனர்.

சமாதானம் செய்பவர்களாக இருந்தமையால், அவர்களில் இரண்டு பேர் இருமாதங்களுக்கு முன்பு பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பயங்கரவாதிகள் இந்நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாமல் விட்டு அவர்கள் இவற்றை ஏற்பார்களாயின் ஏனைய அவர்களும் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

வினா: மிதவாதிகளான தமிழ் எதிர்க்கட்சியினர் ஓர் உடன்படிக்கைக்கு மிகக் கிட்ட உள்ளனர் என நீங்கள் உணர்கிறீர்கள். அவர்களை நீங்கள் பாதுகாக்க இயலாதிருப்பது ஏன்?

விடை: நாம் முதலில் பயங்கரவாதிகளை நீக்கிவிடவேண்டி இருக்கிறது.

வினா: பயங்கரவாதிகளை நீக்கி விடுதல் என்பதன் அர்த்தம் என்ன?

விடை: அவர்களை நாம் முற்றுகத் தோற்கடிக்க வேண்டி இருக்கிறது. அவர்கள் கைப்பற்றப்படாதிருந்தால் அவர்கள் ஆயுதம் ஏந்த இயலாது. இப்பொழுது அதனைச் செய்வது கடினம்

வினா: அவர்களில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

விடை: ஆகக் கூடியது பத்தாயிரம் மட்டில்.

வினா: தோல்விகாணச் செய்வதற்கு அது அரசுக்கு எதிரான ஒரு மிகப் பெரும் கிளர்ச்சி, அல்லவா?

விடை: ஆம். ஆனால் அவர்கள் எல்லோரும் ஆயுதபாணிகளாகி போரிடுவதற்குத் தயாராக உள்ளவர்கள் என நான் எண்ணவில்லை. இப்பதினாயிரம் ஆட்கள், சண்டையில் உள்ளோரும் அவர்களுடைய ஆதரவாளர்களுமாகச் சேர்ந்து இருக்கலாம்.

வினா: உள்ளபடியாக ஆயுதபாணிகள் எத்தனை பேரளவில் இருப்பர் என நீங்கள் சொல்கிறீர்கள்?

விடை: அதில் அரைவாசிப் பேர், அதுவும் ஓரளவு பெரும் தொகை தான். என்றாலும் அவர்களைக் கையாள எங்களால் இயலும் என நான் நினைக்கிறேன். ஆனால் உலகின் அனுதாபம் எங்களுக்குத் தேவையாக இருக்கிறது, இந்தியாவின் ஆதரவு எமக்குத் தேவை. ஏனெனில் அவர்களது பயிற்சி முகாம்கள் இந்தியாவில் உள்ளன. அவர்கள் இந்தியாவிற் பயிற்றப்பட்டு வருகின்றனர். அவர்கள் இந்தியாவிலிருந்து செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் இந்தியாவிற் தாராளமாக நடமாடுகின்றனர். அவர்கள் அவ்வாறு செய்ய விடப்படுதல் வேண்டும் என நான் நினைக்கவில்லை. அதாவது அப்படி விடப்பட்டு ஒரு நட்பான அரசின் மீது வன்செயலைப் பயன்படுத்துதற்கு.

வினா: பொதுநலவரசு மாநாட்டில் இக்குற்றச்சாட்டுகளை நீங்கள் அநேகமாகக் கொண்டு வந்திருப்பீர்கள் என எண்ணலாம். இவற்றைக் கொண்டு வந்த போது திரு. காந்தி என்ன சொன்னார்?

விடை: ஐக்கிய இராச்சியங்களிலும் இந்தியாவிலும் உள்ளது போன்றதுதான் இந்நிலைமை சீக்கியர்கள் ஐக்கிய இராச்சியத்திலிருந்து இந்தியாவுக்கு எதிராகத் தொழிற்பட விடப்படமாட்டார்கள் என திருமதி தட்சர் உடன்பட்டுக்கொண்டார் என நான் நினைக்கிறேன். திரு. காந்தி மிக நல்ல ஒரு மனிதர் என நான் நினைக்கிறேன். அவர் சரியான காரியம் செய்வார் என எனக்குப் பெரும் அளவு நம்பிக்கை உண்டு. இது எம்மை ஆதரிப்பதோ வேறு எவரையோ ஆதரிப்பதோ என்பதல்ல. ஆனால் எந்த ஒரு ஒழுங்கமைப்பினாலும் வன்செயல் புரியப்படுதலாகாது– என்பது தான் விடயம்.

வினா: ஆனால் இலங்கையினுள் நீங்கள் கெரில்லாக்களைத் தோற்கடிக்கும் வரை அவர்களுடன் சண்டையிடுவதைத் தவிர உங்களுக்கு வேறு மாற்று வழியில்லை என நீங்கள் உணர்கிறீர்கள்.

விடை: ?

வினா: இது போர் நிறுத்தத்தைத் கண்காணிப்பது ஆகும்?

விடை: ஆம்

வினா: தமிழ் பிரதேசங்களில் பயன் தரும் வகையில் அரசாட்சி அதிகாரப் பரவலாக்கலுக்கு நீங்கள் ஆயத்தமா?

விடை: மிக நிச்சயமாக நாம் அதனை நிறைவேற்றுவது பற்றிய கேள்விக்கே இடமில்லை எனது கட்சி நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு உள்ளது அது ஒழுக்கக் கட்டுப்பாடு உடையது. எனதுகட்சி அதனை ஏற்றுக் கொள்ளுமானால் அமைச்சரவை அதனை ஏற்றுக் கொள்ளுமாயின், அப்பொழுது நாடு அதனை ஏற்றுக் கொள்ளும். அல்லாவிட்டால் நான் ஒரு பொதுத் தேர்தலை நடத்தும் படி பணிப்பேன்.

வினா: தமிழர்களுடன் அதிகாரம் பகிர்ந்து கொள்ளும் பிரேரணைக்கு எதிரான ஒரு சிங்கள எதிர்ப்பைச் சில சனங்கள் ஆதரிப்பார்களா?

விடை: ஒரு தேர்தலில் மட்டுமே அது நடக்க முடியும். அரசுக்கு எதிரான நேரடிச் செயல் எதையும் நான் அனுமதிக்கமாட்டேன். அது சட்ட விரோதமானதாக இருக்கும். ஆனால் பிரசாரம், சொற்பொழிவுகள், கூட்டங்கள் எங்களுக்கு எதிராக நடத்தப்படக்கூடும். ஒரு சனநாயக நடைமுறை இருக்கிறது.

வினா: இந்தியாவில் இப்பேச்சுக்கள் ஜனநாயக தமிழ் எதிர்த்தரப்புடன் ஏதாவது உடன்பாடுகளைக் கொண்டு வரும் என நீங்கள் எண்ணுகிறீர்களா?

விடை: அவர்கள் தீவிரவாதிகளுக்குப் பயப்படாதிருக்கும் பட்சத்தில், கொண்டுவரும் என எனக்கு மனநம்பிகை உண்டு.

வினா: தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவது உங்களைப் பொறுத்தது.

விடை: என்னால் கட்டுப்படுத்த இயலும் ஆனால் அவர்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்

வினா: பந்தோபஸ்துப் படையினரால் அத்துமீறல்கள் புரியப்படும் என நீங்கள் ஒத்துக் கொள்ளுகிறீர்களா? இப்போது அவர்கள் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர் என நான் எடுத்துக்கொள்ளலாம், அல்லவா?

விடை: முன்னரைவிட மிகச் சிறப்பாக ஆனால் சில சில தருணங்களில் அவர்கள் தவறு புரிவதுண்டு. எல்லாத் துருப்புகளும் அப்படிப் புரிவதுண்டு. குண்டுகளினால் தலைகள் சிதறியும், கைகள் முறிந்தும், வயிறு கிழித்துப் பிளக்கப்பட்டும் அவர்களது சகாக்கள் முகாம்களுள் கொண்டுவரப்படுவதை அவர்கள் காணும்போது அப்படிப் புரிவது உண்டு. ஒரு இயல்பான எதிர் - உணர்வு இருக்கிறது. பயங்கரவாதிகளுடன் சண்டையிட அவர்கள் வெளியே போய் குடிசனங்களோடு மோதிக்கொள்கிறார்கள்.

வினா: இனிமேலும் பந்தோபஸ்துப் படையினர் அப்படிப்பட்ட ஒன்றைப் புரிய விடுவது உங்களுக்குக் கட்டுப்பட்டுவராது என நீங்கள் சொன்னீர்கள், அல்லவா?

விடை: அப்படிப் புரியப்படுதல் ஆகாது. அதனை நாங்கள் தடுக்க முயன்று கொண்டு இருக்கிறோம். அதனாற்தான் கண்காணிப்புக்கு குழு மிக முக்கியமானது என நான் நினைக்கிறேன். அப்படியான காரியங்கள் நடந்தால் அது நடந்து விட்டது என அவர்கள் உடனேயே சொல்லக்கூடும்.

வினா?

விடை: ஆயுதங்களை அவர்கள் கைவிடும்வரை, ஆம் என்னால் செய்யக் கூடியது வேறொன்றுமில்லை.

வினா; ஆனால், பயங்கர வாதிகளைத் தோற்கடிக்கும் நடைமுறையிற்தான் ஆபத்து இருக்கும். அதனைச் செய்ய உங்களால் இயலுமென வைத்துக் கொண்டாலும், பெருமளவு தமிழர் அபிபிராயத்தை நீங்கள் அந்நியப்படுத்துவீர்கள். எப்படியும் இவர்கள் தமிழர்கள்தானே. எனவே அவர்கள் கொலைசெய்யப்படுவதை நாம் பார்த்திருக்க முடியாது என்பர் அவர்கள்.

விடை: நான் அப்படி நினைக்கவில்லை. தமிழர் அபிப்பிராயத்தை அந்நியப்படுத்துவதைப்பற்றி நான் பயப்படவில்லை என நினைக்கிறேன். உலகில் பொதுசன அபிப்பிராயத்தை அந்நியப்படுத்துவதையிட்டு நான் பயப்படுகிறேன். இலங்கையில் நடந்துகொண்டிருப்பது என்ன என்பது குறித்து உங்கள் நாடும், இந்தியாவின் பெரும் பிரிவுகள் உட்பட பிற நாடுகளும் கொண்டிருக்கும் பார்வைக் கோணம் தப்பானது. இது இன மோதலொன்று என அவர்கள் நினைக்கிறார்கள் இது இன மோதலொன்றல்ல. இது இலங்கை முழுவதையும் கைப்பற்ற விரும்பும் சில மக்களின் ஒரு மோதலாகும். இலங்கையின் ஒரு பகுதியையல்ல, இலங்கை முழுவதையும், அத்துடன், அதனை ஒரு மார்க்சீய அரசாக்குவது, அப்படி வெளிப்படையாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

...5ஆம் பக்கம் பார்க்க

# ஆப்கான். கெரில்லாக்கள் அறிவிப்பு: ரஷ்யாவுடன் சமரஸப் பேச்சு பயனில்லை!

(லண்டன்)

சோவியத் யூனியனுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதில் எவ்வித பயனுமில்லை என்று ஆப்கானிஸ்தானின் கெரில்லாக் குழுக்கள் அறிவித்துள்ளன. ஏழு கெரில்லாக் குழுக்கள் ஆப்கானிஸ்தானில் செயற்படுகின்றன. 'வாஷிங்டன் போஸ்ட்' சஞ்சிகைக்கு இக் குழுவினர் அளித்த பேட்டி ஒன்றில் தம் நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் யூனியன் தனது துருப்புகளை வாபஸ் பெறுவத அது செய்யக்கூடியது என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ்வைச் சந்தித்துச் சமீபத்தில் உரையாடியபோது இது விடயத்தில்அமெரிக்காஉறுதியான உத்தரவாதம் அளிக்கு முன் துருப்புகள் வாபஸ் பெறப்படுவது சாத்தியமில்லை என்று அவரிடம் திரு. கொர்பசெவ் தெரிவித்திருந்தது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### இத்தாலிய மாஜிப் பிரதமர்

## கிரெக்ஸி விவகாரத்தில் சுமுக தீர்வு உண்டாகியதாக தகவல்

(ரோம்)

இத்தாலியின் பிரதம மந்திரியாக திரு. கிரெக்ஸியே மீண்டும் நியமனமாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது குறித்த சர்ச்சைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது

இது இவ்வாறு இருக்க, இத்தாலியக் கப்பல் கடத்தல் சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாலஸ்தீனியர்கள் மீதான வழக்கு விசாரணை அடுத்த மாதத் துவக்கத்தில் இத்தாலிய சுப்ரீம் கோட்டில் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இக்கப்பல் கடத்தல் விவகாரத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவரான அபு அபாஸை விடுதலை செய்தது தொடர்பான கருத்து வேறுபாட்டால் திரு. கிரெக்ஸி பதவி விலகியது குறிப்பிடத்தக்கது.

## போர்நிறுத்த உடன்பாட்டை மீறுவதாக இ. கம்யூ. கட்சி இராணுவம் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

"இலங்கையில் போர் நிறுத்த உடன்பாட்டையும் மீறி இலங்கை இராணுவம் தமிழர்கள் மீது வன்முறைகள் நடத்தி வருவது குறித்து மத்தியஅரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று இந்திய கம்யூனிஸ்ட்கட்சி வற்புறுத்தியுள்ளது.

இக்கட்சியின் தேசியக் கவுன்ஸில் தலைவர் திரு. என். கே. கிருஷ்ணன் மேற்கண்டவாறு வற்புறுத்தல் விடுத்துள்ளார்.

"இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்வுகாண வழிகோலவும், போர் நிறுத்த உடன்பாட்டை இருசாராரும் சீராகக் கடைப்பிடிக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்,' என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### ரோஜா மலரால் சமாதி அலங்கரிப்பு

## இந்திரா சிறப்பியல்பு பற்றி உலகத் தலைவர் புகழாரம்

(புதுடில்லி)

அன்னை இந்திரா காந்தி மறைந்த ஓராண்டு நினைவையொட்டி நேற்றுக் காலை தலைநகரில் விசேட நிகழ்ச்சிகள் பல இடம்பெற்றன.

அவரது சமாதி ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் மீது பல நதிகளில் இருந்தும் பெறப்பட்ட புனித நீர் தெளிக்கப்பட்டது.

அன்னை இந்திராவின் பெருமை குறித்து பல உலகத் தலைவர்களும் புகழாரம் சூட்டியுள்ளனர்.

"ஒற்றுமையின் சின்னமாக அவர் விளங்கினார்" என்று அமெரிக்கா ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் கூறியுள்ளார்.

"அவரது பெருமை மிகப் பெரியது" என்று சோவியத் அதிபர் திரு. குரோமிக்கோ தெரிவித்துள்ளார்.

"நமது வரலாறு படைக்கப்படும்போது அதன் சிறப்பு எவ்வாறு அமைந்தது என்பதற்கு திருமதி காந்தியின் வாழ்க்கை ஆதாரமாக விளங்கும்" என்று ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் திரு.பெரஸ்டி குவெல்லர் கூறியுள்ளார்.

## கடத்தப்பட்ட 3 ரஷ்யர்களும் பெய்றூட்டில் விடுதலையாகினர்

(பெய்றூட்)

மேற்கு பெய்றூட்டில் வைத்து ஒரு மாதத்திற்கு முன் கடத்திச் செல்லப்பட்ட மூன்று சோவியத் அதிகாரிகளும் நேற்று முன்தினமிரவு விடுவிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெய்றூட்டிலுள்ள சோவியத் தூதரகத்தில் இவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இக்கடத்தலுக்கு உரிமை கோரியுள்ள இஸ்லாமிய விடுதலை முன்னணியினர் தமது நல்லெண்ணத்தைக் காட்டவே அவர்களைத் தாம் விடுதலை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ் விடுதலையையடுத்து ரொக்கெட்டுகள் ஏவப்பட்டும் இயந்திரத் துப்பாக்கிகளால் மேல் நோக்கிச் சுட்டும் மகிழ்ச்சி கொண்டாடப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

### தீவிரவாதிகளை ...

வினா: ஆனால் ஆயுதம் ஏந்தி நிற்பவர்கள் ஐயாயிரம் மனிதர்கள் மாத்திரமென்றால் அது ஒரு பயங்கர பாரதூரமான பயமுறுத்தலாக இருக்க முடியாதல்லவா?

விடை: ஆனபடியாற்தான் அவர்களைத் தோற்கடிக்க எம்மால் இயலும் என நான் சொன்னேன்.

வினா: நீங்கள் முயன்றதோ மிக நெடுங்காலம். ஆனால் இதுவரை நீங்கள் வெற்றி காணவில்லை.

விடை: சரி, இரண்டு ஆண்டுகளாக நாங்கள் அடையவில்லைத்தான். முழு உலகும் எங்களுக்கு எதிராக நின்று வந்துள்ளது. உதவி நிறுத்தப் போவதாக அவர்கள் அச்சுறுத்தியிருக்கிறார்கள். எங்களைப் பகிஸ்கரிப்போம் என அவர்கள் பயமுறுத்தியுள்ளார்கள். நாங்கள் இன ஒதுக்கல் கொள்கையை அனுசரிப்பதாக அவுஸ்ரேலியாவில் அரசியல்வாதிகள் சிலர் சொன்னார்கள். அதனை அவர்கள் மறுத்துரைக்க வேண்டியதாக இருந்தது. அவர்கள் மன்னிப்புக்கோர வேண்டியிருந்தது. இங்கு நடந்தேறிய குறித்தசில காரியங்களால் உலகம் தவறான ஒரு கருத்துக் கொண்டிருக்கிறது.

### தலைநகரில்பிரதமர்முன் எம்.ஜி. ஆர் கோரிக்கை

## சகல நதிகளையும் தேசிய நதிகளாக்க வேண்டும்

(புதுடில்லி)

"நாட்டில் உள்ள சகல நதிகளையும் தேசிய நதிகளாக அறிவிக்கவேண்டும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு, எம். ஜி இராமச்சந்திரன் புதுடில்லியில் நடைபெற்ற நீர்வளச் சபையின் முதலாவது கூட்டத்தில் பேசுகையில் கோரிக்கை விடுத்தார்.

இக்கூட்டம் பிரதமமந்திரி திரு. ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்றது.



"சகல மாநிலங்களுக்கிடையேயும் பாயும் நதிகள் யாவும் இவ்விதம் தேசிய நதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்" என்று அவர் தன் வேண்டுகோளில் குறிப்பிட்டார்.

நதிகளால் நாடுபூராவும் நீர் செறியும் நிலை உண்டாகவேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். இதற்காகவொரு வாரியமோ நதிக் கமிஷனோ கூட நியமிக்கப்படலாம் என்றும் அவர் கருத்து, வெளியிட்டார்.

இது விடயத்தில் நவீன முறை கையாளப்பட்டு நீர் பகிர்ந்துகொள்ளப் பட்டாலே இதற்குத் தீர்வுகாண முடியும் என்று கூறிய முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன், "அதிகளவு நதி நீர் உள்ள மாநிலங்கள் அயல் மாநிலங்களுக்கும் உதவ வேண்டும். கேரள, ஆந்திர, மகாராஷ்டிர மாநிலங்களுக்கிடையேயான கிருஷ்ணா நதித்திட்டம் பற்றி விரைவில் நல்ல தீர்வு காணப் பிரதமர் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்றார்.

## மரண அறிவித்தல்

புத்தூர், நவக்கிரியைச் சேர்ந்த

**ஆறுமுகம் தங்கராசா**

(லொறி, உழவு யந்திர உரிமையாளர்)

**காலமாகிவிட்டார்**

தோற்றம் *15.10.38* மறைவு *30.10.85*

அன்னார் காலஞ் சென்ற ஆறுமுகத்தினதும் சரஸ்வதியினதும் அன்பு மகனும், காலஞ் சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாதேவி, கலா மோகன், தர்மகுலதேவி, ரவீந்திராதேவி, பாஸ்கரமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாக்கியம் சுப்பிரமணியம் வெள்ளைத்தம்பி நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக் கிரிகைகள் வெள்ளிக்கிழமை (01-11-1985) காலை 10 மணியளவில் நடைபெறும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

நவக்கிரி,
புத்தூர்.

தகவல்;
ஆ. சுப்பிரமணியம்

### கால்நடைகளை வளர்ப்பவர்களுக்கு

## ஓர் அறிவித்தல்

தற்போது பயிர் செய்கை பண்ணும் காலம் ஆரம்பித்துள்ளது. இந்த நேரத்தில் பொது மக்கள், விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளை பயிர் செய்யும் நிலங்களுக்குள் புகுந்து அழிக்க விடாது பாதுகாப்பதும் கட்டி வளர்ப்பதும் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். ஆதலால், பயிர் செய்யும் காலம் முடியும்வரை வளர்க்கும் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும் என அறியத் தருவதோடு, பயிர் செய் நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை அழிக்கவிடாது. பாதுகாத்தல் வேண்டும்.

கால்நடைகளைக் கட்டி வளர்க்காது கட்டாக்காலியாக விட்டுவிடுவது 1979ம் ஆண்டின் 58ம் இலக்க கமநல சேவைகள் சட்டத்தின் ஏற்பாடுக்கு முரணானது. ஆகவே இந்த விடயத்தில் கால்நடைச் சொந்தக்காரரர் கவனம் எடுத்தல் வேண்டும், பயிர் செய்கைபண்ணும் நிலங்களுக்குள் எவருடைய கால்நடைகளாவது புகுந்தால் உடனடியாக அந்தக் காணிச் சொந்தக்காரர் அல்லது பயிர் செய்கையாளர் கால்நடையைப் பிடித்து தங்கள் பிரிவு பயிர்ச் செய்கை உத்தியோகத்தரிடம் வேண்டிய நடவடிக்கைக்காக அறிவித்தல் வேண்டும். கட்டாக்காலிகால்நடைகளை பிடிப்பதற்கென அதிகாரம் பெற்றவர்களும் பயிர்ச்செய்கைக் காணிகளுள் அத்துமீறி நட்டம் விளைவிக்கும் கால்நடைகளைப் பிடித்து அந்தந்த பகுதி பயிர் செய்கை உத்தியோகத்தரிடம் அறிவித்தல் வேண்டும்.

க, பரமலிங்கம்
உதவி ஆணையாளர்,
கமநல சேவை,
யாழ்/கிளிநொச்சி மாவட்டம்.

ஈழமுரசு

## பாகிஸ்தான் இலங்கை குழுவை எட்டு விக்கட்டுகளால் வென்றது

பாகிஸ்தானில் நடைபெற்ற இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் குழு எட்டு விக்கட்டுகளால் இலங்கைக் குழுவைத் தோற்கடித்துள்ளது. இலங்கை அணியைத் தோற்கடிப்பதற்கு 98 ஓட்டங்களை மட்டுமேபெற வேண்டிய நிலையில் நேற்றுக் காலை ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி, நண்பகல் இடைவேளைக்குச் சற்றுநேரம் முன்னர் இரண்டு விக்கட்டுகளை மட்டுமே இழந்த நிலையில் 100 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. ஸ்கோர் விபரம்; இலங்கை முதல் இன்னிங்ஸ் 157; இரண்டாவது இன்னிங்ஸ் 20 ; பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸ் 259; இரண்டாவது இன்னிங்ஸ் இரண்டு விக்கட் நஷ்டத்திற்கு 100 ஓட்டங்கள்.

### நோயாளிகள் கட்டிலின்கீழ் படுத்தனர்

# ராணுவ பவனியில் வெடித்த குண்டுகளால்

# ஆஸ்பத்திரி யன்னல்கள், கண்ணுடிகள் சிதறின

(இருபாலை)

நேற்று முன்தினமிரவு யாழ்நகரில் இடம்பெற்ற இராணுவ பவனியின் போது வெடிக்கப்பட்ட குண்டுகள் காரணமாக யாழ். வைத்திய சாலை வளவுகுள் உள்ள இரண்டு கட்டடங்களின் யன்னல்கள், கண்ணுடிகள், மின்சார வயர்கள், இரும்பு அலுமாரிகள் ஆகியன சேதமடைந்துள்ளன.

தொடர்ந்து வெடிக்கப்பட்ட குண்டுகளின் சிதறல் துண்டுகள் வைத்தியசாலை பரிசோதனைக் கூட அறைகளின் யன்னல் கண்ணுடிகளை துளைத்துக் கொண்டு மின்சார வயர்கள் இணைக்கப் பட்டிருக்கும் பெட்டியுடன் மோதி, அங்கிருந்த இரும்பு அலுமாரியையும் துளைத்துக் கொண்டு பின்புறத்தால் வெளியேறி சுவரினுள் புதையுண்டுள்ளன.

ஆஸ்பத்திரி வார்ட் ஒன்றின் யன்னல்களையும், கண்ணுடிகளையும் இக்குண்டுகள் துளைத்துள்ளன. பல நோயாளிகள் இக்குண்டு வெடிப்புச் சத்தங்களினுல் கட்டில் அடியினுள் ஒளிந்து கொண்டதாகவும் தெரிய வருகிறது.

சிதறிப்பறந்த குண்டுகளின் துண்டுகளும் எடுத்து வைக்கப் பட்டுள்ளன.

### மின் நிலைய கொள்ளையின் எதிரொலி:

## ஊழியர்கள் மீது மேலிடம் கடும் விசாரணை; பராமரிப்பு, மின் இணைப்பு வேலைகளுக்கு தடை!

கடந்த 25ம் திகதி இரவு ஆயுதபாணிகளாகவந்த இனந்தெரியாதநபர்கள் ஊழியர்களின் உயிர்களை குறிவைத்து மக்களின் அத்தியாவசிய சேவைக்குரிய மின் உபகரணங்களையும், அலுவலக உபகரணங்களையும் குறிப்பாக அவசர திருத்த வேலைகட்கு உபயோகிக்கப்படும் மின்சாரக் கருவிகள், மானிகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இன்றுள்ள நிலையில் மின்சாரம் தடைப்பட்டால் மீண்டும் திருத்தி வழங்கக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை.

இவ்வாறு கிளிநொச்சிப் பிராந்திய இலங்கை மின்சார சபை பொறியியலாளர் பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேற்படி கொள்ளையினுல் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவிக் கிராம மக்களேயன்றி வேறு எவரும் இல்லையென்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்களா என்றும் ஊழியர்கள் மேலிடத்தாரின் விசாரணைக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்களும் வர்த்தகர்களும் சரியான அடையாளமும் சிட்டைகளும் இல்லாத பொருட்களை எவரிடமிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டாமென்றும், அப்படி வாங்கி வைத்திருத்தல் பாரதூரமான விளைவுகளைஏற்படுத்தலாமென்றும் பொறியியலாளர் மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார்,

ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் துணுக்காய், வவுனிக்குளம், மல்லாவி, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, நெடுங்கேணி, மன்ஞர், தலைமன்ஞர் ஆகிய பகுதிகளுக்கு புதிய மின் இணைப்பு சம்பந்தமான வேலைகள், முக்கிய பராமரிப்பு வேலைகள் இதனுல் தடையாகுமென்றும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

### முழுநடும்

...1ம் பக்கத் தொடர்

களுக்கு அது புரியும்'' என்று குறிப்பிட்டுள்ள திரு. சிவசிதம்பரம், ''தமிழர்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் படாததால் தான் அவர்கள் தனிநாடு கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்று தனது தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் 1977ம் ஆண்டு தேர்தல்விஞ்ஞாபனத்திலேயே தெரிவிக்கப்பட்டிருப்பதை மறந்து, இலங்கையில் இனப் பிரச்சினையே இல்லை என்று இன்று ஜனதிபதி கூறுவது விநதையாகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுக்குக் காலத்தை இழுத்தடித்து, ராணுவத் தீர்வு காண்பதற்கே அரசாங்கம் முனைந்து வருவதை உலகம் நன்கறிந்து விட்டது. உலகை இவர்களால் இனி ஏமாற்ற முடியாதெனவும் இங்கு திரு. சிவசிதம்பரம் மேலும் தெரிவித்தார்.

### கோட்டை...

...1ம் பக்கத் தொடர்

சேதத்துக்குள்ளானது தெரிந்ததே.

இதுபற்றி கண்காணிப்புக் குழு எதிர்வரும் திங்கள், செவ்வாய் யாழ்ப்பாணத்துக்கு நேரில் வந்து விசாரணை செய்யும்,

இத்தாக்குதல்கள் பற்றி சாட்சியமளிக்க நேற்றுவரை எட்டுப் பேர் முன்வந்ததாகத் தெரியவந்துள்ளது.

### சீனி, அரிசி

தைத் தொடர்ந்து பல இடங்களில் சீனியும் விலை கூடலாம் என்ற வதந்தியால் அதற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் கிலோ இருபது ரூபாவாகவும் சீனி விற்கப்படுகிறதாம். இதேவேளை அடுத்த புதன்கிழமை மா கப்பலும், அடுத்த சனிக்கிழமை அரிசி கப்பலும் வடக்கே வருவதாகவும் இதனுல் இப்பொருட்களுக்கு எதுவித தட்டுப்பாடும் ஏற்படாது எனவும் அவர் சொன்ஞர்.

செவ்வாய்க்கிழமை 1800 கிலோ உரத்துடன் மற்றொரு கப்பலும் இங்கு வரவுள்ளது.

### இந்திராவுக்கு....

காங்கிரஸ் எம். பிக்கள், கட்சித் தலைவர்கள் சமாதியில் மலரஞ்சலி செலுத்தினர்.

சமாதிக்கருகே அரசமரம், ஆலமரம், மாமரம் முதலான மரங்களின் கன்றுகள் நடப்பட்டன.

ஜனதிபதி திரு. ஜெயில்சிங்கும் சமாதியில் அஞ்சலி செலுத்தினர். இந்தியாவின் சகல பகுதிகளிலும நேற்று அஞ்சலி நிகழ்ச்சி ஆடம்பெற்றது.

### இளைஞர்கள்....

நடவடிக்கையில் ஈடுபட்ட ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கோட்டை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட இருபது இளைஞர்களும் நேற்று முற்பகல் விடுதலை செய்யப்பட்டனர்.

### தமிழ்ப் பிரதேசம்....

...1ம் பக்கத் தொடர்

சுப்பிரமணியம் மேலும் பேசுகையில் தமிழர்கள் வாழும்பிரதேசம் ஒரு பிரதேசம் தான். இதனை இரண்டு என்று சொல்லிப் பிரிப்பதை இந்திராஇன்று உயிருடன் இருந்திருந்தால் அனுமதித்திருக்க மாட்டார் என்றும சொன்ஞர்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் இங்கு பேசுகையில், உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக என்றுமே குரல் கொடுத்தவர் அன்னை இந்திரா என்றும், அவருக்கு அஞ்சலி செலுத்த ஈழத்தமிழர்கள் கடமைப்பட்டவர்கள் என்று சொன்ஞர்.

துர்க்காதுரந்தரி தங்கம்மா அபாக்குட்டி, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பொன். மதிமுகராசா, அதிபர் இஷாகுத்தீன் உட்பட மற்றும் பலர் பேசினர். கொட்டும் மழையிலும் பெரும தொகையான மாணவ மாணவியர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

### வடக்கல் துக்கக்...

...1ம் பக்கத் தொடர்

களிலும் அஞ்சலிக் கூட்டங்களும, மத அனுஷ்டானங்களும் இடம்பெற்றன.

நேற்றுப் பெய்த மழையையும் பொருட்படுத்தாது முக்கிய இடங்களிலும் வீதிகளிலும் வெள்ளை, கறுப்பு கொடிகள் பறக்க விடப்பட்டன. சில இடங்களில் வாழை மரங்களும், தோரணங்களும் கட்டப் பட்டன.

## முதல்வர் எம். ஜி. ஆருக்கு யாழ். பொது நூலககுழு நன்றி

உலக வரலாற்றினைப் படைத்த தலைசிறந்த சிந்தனையாளர்களைக் கொண்ட நாடுகளாக இந்தியாவும், கிரேக்கமும் விளங்குகின்றன. ஐரோப்பாவின் தலைமைத்துவம் கிரேக்கநாட்டிடம் இருந்தது போன்று என்றும் ஆசியாவின் வழிகாட்டியாக இந்தியாவே முதன்மை பெறுகிறது.

இவ்வாறு யாழ். பொதுசன நூலக குழுவின் சார்பில் தமிழக அரசின் அன்பளிப்பான புத்தக தொகுதிகளை இந்திய உயர் ஸ்தானிகரிடமிருந்து பெற்றுக்கொண்டமை தொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு யாழ்மாநகர ஆணையாளர் திரு.சி.வி.கே. சிவஞானம் அனுப்பிவைத்துள்ள நூலக குழுவினுல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புராதன காலம் தொட்டு நமது காலம் வரை ஒரே தொடராக ஆற்றொழுக்காக ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நாகரிகத்தின் மகத்துவத்தை நன்மதிப்பிற்குரிய இப்புத்தகச் சேர்வுகள் கண்டிப்பாக பிரதிபலிக்கின்றன. இந்திய நாகரிகத்தின் தனித்துவத்தைத் தோற்றுவித்த சிந்தனைக் கருவூலங்களையும், குறிக்கோள்களையும் அவை பிரதிபலிப்பனவாக இருந்தால், அதே நாகரீகத்தின் பங்காளர்களாக நாமும் உரிமை பாராட்டலாம். தொன்மைவாய்ந்த தமிழ் மொழியை புதிய உபயோகங்களுக்குப் பிரயோகிக்க கூடியதாக 2000 ஆண்டுகட்கு முன் தொட்டு நவீன காலத்தை எட்டும் படியாக எண்ணிக்கையில் அதிகரித்த புத்தகங்கள் தமிழ் மொழியில் இருப்பது யாழ்ப்பான நகரத்தின் தமிழ்ப் பேசும் மக்களுக்கு திருப்தியளிப்பதற்குக் குறிப்பான ஒரு காரணமாகும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இரண்டு........

...1ம் பக்கத் தொடர்

நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

வவுனியாவில் சில தினங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட சிங்களவர்களைத் தேடும் முயற்சியின் போது முகாம் ஒன்று பந்தோபஸ்து படையினரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து பெருமளவு பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

### வடபகுதி...

1ம் பக்கத் தொடர்

கொழும்புக்கான இன்ரசிற்றி ரயில் திங்கள், புதன், ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும்.

இந்த ரயில் பிற்பகல் 2.15க்குக் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும்.

### ஊழியரை ....

பாதுகாப்புக் கருதி வெளிக்கள வேலைகளில் ஈடுபட மறுத்திருந்தார்கள்.

இதனுல் மின்சாரம் இல்லாததால் பாதிப்புற்ற பொதுமக்களின் சார்பில் நலன் விரும்பிகள் மேற்கொண்ட முயற்சியால் மின் ஊழியரை தாக்கிய நபரை அழைத்து வந்து மின் ஊழியர்களிடம் மன்னிப்புக் கோர வைத்ததுடன் அவர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். இதனையடுத்து ஊழியர்கள் நேற்று முதல் வேலைக்கு திரும்பியுள்ளனர்.

## துணைவேந்தர் அடையாள அட்டைகள் தவறிவிட்டன

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமது 'பர்ஸை' இரு தினங்களுக்கு முன்னர் யாழ். பஸ் நிலையத்தடியில் தவறவிட்டு விட்டார். அதறகுள் அவரது தேசிய அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியனவும் இருந்தன. இதனை எவராவது கண்டெடுத்திருந்தால் தம்மிடம் ஒப்படைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

## வெள்ளத்துள் தபால் நிலையம்

கடந்த இரு தினங்களாக தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினுல் யாழ்ப்பாணம் தபால் நிலையத்தைச் சுற்றி வெள்ளம் நிரம்பியிருந்தது. இதனுல் ஊழியர்களும், பொது மக்களும் தபால் நிலையத்துக்குள் செல்ல முடியாது தத்தளித்தனர்.

## பெற்ருேர் தின விழா

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி பாலர் பகுதியின் பெற்ருேர் தின விழா இன்று மாலை 4 மணிக்கு, கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஆயர் மகாவந். பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பகுதி பேராசிரியர் சீ. சீ. பாலசுப்பிரமணியம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

## அஞ்சலி

(சென்னை)

''இலங்கையில் சகல தமிழ் மக்களின் உள்ளங்களிலும் அன்னை இந்திரா நிலைத்திருக்கிருர்'' என்று தமிழீழ விடுதலை இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 87, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள வர்களது அச்சகப் பகுதியில் 1-11-1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336